# 12 இறையாட்சி நிலைபெற உழைத்த இரு பெண்கள்

## இயேசுவின் தாயார் மரியாள்



அன்புக்குரிய தாயாகிய மரியாளே!
எல்லா இளம் வயதினரைப் போல் நீரும் உம் திருமணம் பற்றி
கனா கண்டு கொண்டிருந்த காலம் அது.
நீர் எதிர்பாராத வேளை,
உம் முன் தோன்றினார் காபிரியேல் தூதன்.
அவர் கூறியவையோ உம்மைத் திகைப்படையச் செய்திருக்குமே!

''அருள்மிகு பெற்றவளே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்.
மரியா அஞ்ச வேண்டாம்; கடவுளின் அருளைக் கண்டடைந்துள்ளீர்.
இதோ கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர்.
அவருக்கு இயேசு என்று பெயரிடுவீர்.''
லூக்கா 1 : 30-31

**'இது எப்படியாகும்; நான் கன்னியாயிற்றே'** என்று அங்கலாய்த்தீர்.
தேவகுமாரனை உம் கருவறை சுமக்கும் பொறுப்புத் தரப்பட்டதே.
அவரை வளர்ப்பதற்கு நீர்தான் தகுதியுடைவர் என்பது இறைவனின் தீர்மானம்.
அவ்வேளை உமக்கேற்பட்ட தயக்கம், பயம் நியாயமானவையே,
**'நான் ஆண்டவரின் அடிமை; உம் சொற்படி எனக்கு நிகழட்டும்' என்று கூறி பணிந்தீர்.**

யாரிடம் இப் புதினங்களைப் பேசிடலாம் என்று ஏங்கினீரோ!
எலிசபத்து என்பவரைப் பற்றி வானதூதன் உம்மிடம் பேசினாரல்லவா,
எனவே, எழுந்து யூதாவின் மலைகளை நோக்கி ஓடினீர்;
தேவதாருகளின் நிழலில் அமைந்திருந்த அவ்வெழில் மிகு இல்லம்;
அங்கு உமக்காகக் காத்திருந்தார் இனத்தவர் எலிசபெத்து.
அவரின் வாழ்த்துதல், 'நீர் பெண்களுக்குள் ஆசிர்வதிக்கப்பட்டவள்' என்பதல்லவா

அதைக் கேட்ட மரியாளே,
உம் இதயத்திலிருந்து விண்ணகம் நோக்கி எழுந்த பாடல்,
இன்று எம்மனதில் சிந்தனைகளைத் தூண்டுகிறதே
அதில் பொதிந்து கிடக்கும் கருத்துக்களோ
இன்றைய சமுதாய சீர்த்திருந்தவாதிகளை தலைகுனியச் செய்கின்றனவே.

**மரியாவின் பாடல் (ஒரு பகுதி)**

*அவருக்கு அஞ்சி நடப்போருக்கு...... அவர் இரக்கம் காட்டி வருகிறார்*
*உள்ளத்தில் செருக்குடன் சிந்திப்போரைச் சிதறடித்து வருகிறார்*
*வலியோரை அரியணையின்று தூக்கி எறிந்துள்ளார்*
*தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகிறார்*
*பசித்தோரை நலன்களால் நிரப்புகின்றார்*
*செல்வரை வெறுங்கையாய் அனுப்பி வைக்கிறார்.* (லூக்கா 1:50-53)

பிறக்கப்போகும் மகனுக்கு இது தாலாட்டுப் பாடல் அல்ல,
ஆனால் அவர் தொடரவேண்டிய பணியின் செயல்திட்டமல்லவா?
வரும் மெசியாவின் எண்ணக்கருக்களை முன்னமே அறிந்து கொண்டீரோ?
அதற்காகத்தான் அவரைத் தொழுவத்தில் பெற்றெடுத்தீரோ?
எத்தனையோ குழந்தைகளை அன்று ஏரோது கொன்று ஒழித்தானே;
இரவிரவாய் ஓடி இயேசுவை நீர் தப்புவித்துக் கொண்டீரே!



தாயும் தகப்பனுமாயிருந்து சிறுவன் இயேசுவை வளர்த்தெடுத்தீரே
மேசியா தன் திருப்பணியை செய்ய ஒத்துழைப்பு வழங்கினீரே
வீரத் தாயாய் ஒன்றாய் உரைந்து சிலுவைத் துயரத்தையும் கண்டீரே!

சிமியோன் கூறியபடியே ஒரு வாள் உம் உள்ளத்தை ஊடுருவிச் சென்றதே
உயிர்தெழுந்த ஆண்டவரின் பணியைத் தொடர்ந்து செய்தீர்
நீர் பெண்களுக்குள்ளே ஆசீர்பெற்றவர். **'நீர் பேறுபெற்றவர்'**
என்று எலிசபெத்துடன் எங்கள் உதடுகளும் சேர்ந்து ஒலிக்கின்றன.

**(ஆக்கியோனின் அனுமதியுடன் இக்கவிதை அச்சிடப்பட்டுள்ளது)**

## மகதலா மரியா



இவர் இயேசுவிடம் முதலில் அறிமுகம் செய்யப்பட்டபோது இவரில் குடிகொண்டிருந்த 7 பொல்லாத ஆவிகள் துரத்தப்பட்டு குணமானார். அவ்வேளையிலிருந்து, இயேசுவை பின்தொடர்ந்து பணிபுரிந்தார். இயேசுவுடன் பணிபுரிந்த பெண் சீடர் நிரலில் இவர் எப்போதும் முதலில் குறிப்பிடப்படுகிறார்.

இவர் இயேசுவின் மரணம், அவரின் வெறுமையான கல்லறைக்காட்சி, உயிரத்தெழுதல் பற்றிய செய்தியை அறிந்து சீடருக்கு கூறுதல் போன்ற முக்கிய நிகழ்வுகளின்போது பிரசன்னமாயிருந்தார் என்று நான்கு நற்செய்தி நூல்களும் கூறுகின்றன. யோவானின் நற்செய்தியின்படி (20:1-18) ஆண்டவர் உயிர்த்தெழுந்த பின்னர் முதலில் காட்சியளித்தது இவருக்காகும். இச்செய்தியை விரைவில் சென்று ஏனைய சீடருடன் பகிர்ந்து மகிழ்ச்சியுற்றார்.

அன்றைய யூத சமுதாயம் பெண்களை மிகக் கீழ்நிலையிலேயே வைத்திருந்தது. எந்த பதவிக்கும் அவர்களை நியமிக்க முடியாதபடி கட்டுப்பாடு கடுமையாக இருந்தது. எனினும் இயேசுவுடன் திருப்பணியில் மிக ஆர்வமாகப் பெண்கள் பங்கெடுத்தனர். மகதலாமரியா இயேசுவின் தாயாரோடு சேர்ந்து சிலுவை வரை இயேசுவோடு துணை சென்று செயல்பட்டார்.

கி.பி 1ம், 2ம் நூற்றாண்டுகளில் இவ்வாறு கிறிஸ்துவைப் பின்பற்றி, தாம் கொண்டிருந்த பற்றுறுதிக்காக இரத்தச் சாட்சிகளாக பல பெண்களும் மரித்தனர்.

### செயற்பாடு

*மரியாவின் கீதம் மிகப் புரட்சிகரமான கருத்துக்களை உள்ளடக்குகின்றது. குழுவாக இணைந்து, மிகக் கவனமாக அப்பாடலின் வார்த்தைகளை வாசித்து, சமுதாயச் சீர்திருத்தத்திற்கு உறுதுணையாகும் கருத்துக்களை நிரல்படுத்துக.*

### செயன்முறை

1. *பெண்கள் ஆற்றக்கூடிய இறையரசுப் பணி என்ன? அவற்றை நிறைவேற்றும் வழிமுறைகள் 3 கூறுக.*
2. *21ம் நூற்றாண்டுக்கு பெண்கள் குருத்தவத்தைப் நடத்துதல் பற்றி , கலந்துரையாடல்.*